HC JN II – 2020

பதிவு எண் / Register No.

சட்டத் தாள் I

**LAW PAPER I**

**(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)**

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி

Duration : 3 Hours

மொத்த மதிப்பெண்கள் : 100

Max. Marks : 100

SEAL

*தேர்வர்களுக்கான பொதுவான குறிப்புகள் :*

*General Instructions to candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண், ஆவணங்களின் விபரங்கள், தரப்பினர்களின் பெயர் மற்றும் சாட்சிகள் ஆகியவை கற்பனையே. இருப்பினும், தேர்வர்கள் அவைகளை சரியென எடுத்துக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e. the court's name, place, case numbers, documents details, names of parties and witnesses are fictional. Yet candidates have to take them to be true for the purpose of answering the questions.

ii) தேர்வர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடை அளிக்க வேண்டும். ஆனால் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறிமாறி விடையளிக்க கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் வழங்கப்பட்டு உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவே இறுதியானது.

The Questions are provided in Tamil and English versions. In all matters and in case of doubt, English version is final.

iv) வினாக்களுக்கு விடையளிக்கும் போது, முன் தீர் முடிவு வழக்கின் விவரப்பட்டியலை அளிக்க வேண்டியதில்லை. தவறான அல்லது முழுமை பெறாத விவரப்பட்டியலை வழங்குதல், தேர்வர்களுக்கு பாதகமாக அமையும்.

The candidates need not provide cause title with citation while answering the questions. Providing wrong or incomplete cause title or quoting a wrong citation will be detrimental to the candidates.

v) விடையளிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் சுருக்கமாக தேர்வர்கள் விடையளிக்க வேண்டும்.

The Candidates shall give answers briefly within the space provided for answering.

vi) அ, ஆ, இ, ஈ என்ற ஒவ்வொரு பிரிவிலும் தலா ஏழு 3 மதிப்பெண் வினாக்கள் மற்றும் நான்கு 5 மதிப்பெண் வினாக்கள் முறையே இடம்பெற்றிருக்கும். தேர்வர்கள் அவற்றில் முறையே ஐந்து 3 மதிப்பெண் வினாக்கள் மற்றும் இரண்டு 5 மதிப்பெண் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

Section A, B, C, D have seven 3 marks questions and four 5 marks questions respectively in each Part and candidate shall answer five 3 mark questions and two 5 mark questions respectively in each Part.

TNPSC - SPECIMEN

சட்டத் தாள் I

# LAW PAPER I

பிரிவு அ

## SECTION A

பகுதி அ — (5 × 3 = 15)

**PART A — (5 × 3 = 15)**

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Answer any FIVE Questions.**

உரிமையியல் வழக்கு விசாரணைமுறைச் சட்டம்

## CODE OF CIVIL PROCEDURE

1. தற்காலிக உறுத்துக்கட்டளை கோரும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதியில் கூறியுள்ள சங்கதிகள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய வழக்கின் தரப்பினரை அழைப்பதற்கு நீதிமன்றத்திற்குரிய அதிகாரத்தை உரிய சட்ட பிரிவுகளுடன் விவரிக்கவும்.

   Explain, with relevant provisions, the powers of Court to call a party to the suit for cross examination in respect of the facts stated in the affidavit filed along with the application for temporary injunction.

2. நிறைவேறுதல் நடவடிக்கைகளில் முன்னெச்சரிப்பு மனு நிலைக்கத்தக்கதா என்பதை குறித்து உரிய சட்டப்பிரிவுகளுடன் விவாதிக்கவும்.

   Discuss the legal provision on the maintainability of caveat in execution proceeding?

3. ஒரு கூட்டுரிமையாளர் மற்றொரு கூட்டுரிமையாளருக்கெதிராக உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யும் மனுவை பரிசீலிக்கையில் நீதிமன்றம் என்னென்ன கோட்பாடுகளை கருத்தில் கொள்ள வேண்டும்?

   What are the principles to be considered by the Court while deciding a petition filed by one co-owner seeking injunction against another co-owner?

TNPSC SPECIMEN

4. பிரதான வழக்கிலும், இடைக்கால உறுத்துக்கட்டளை கோரும் மனுவிலும் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் ஒரே பரிகாரமாக இருக்கும் போது நீதிமன்றம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையை விரிவாக விளக்கவும்?

What is the procedure to be adopted by the Court, while deciding an application seeking temporary injunction, when the relief sought in the said application and in the main suit are identical?

5. சாட்சியை விசாரித்த பின்னர் வழக்கின் தரப்பினரை விசாரிக்க அனுமதி கொடுக்கும் போது என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும்? அதைப்பற்றி உரிய சட்டப்பிரிவுகளுடன் சுருக்கமாக கூறவும்.

What are the factors to be considered by the Court before it permits examination of a witness before the examination of a party. Explain briefly with relevant provision.

6. இடைக்கால ஆதாயம் கேட்டு பின்னிணைவாக தாக்கல் செய்யப்படும் வழக்கிற்கான உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 2 விதி 2–ன் கீழான தடை குறித்து விளக்கவும்.

Explain about the bar of subsequent suit for mesne profits, under Order 2 Rule 2 of Code of Civil Procedure.

7. தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவை மீறி செய்யப்படும் சொத்துரிமை மாற்றத்தின் செல்லுபடி தன்மை குறித்து விளக்கவும்.

Describe the validity of transfer of property in violation of the order of temporary injunction.

TNPSC - SPECIMEN

பகுதி ஆ — (2 × 5 = 10)

**PART B — (2 × 5 = 10)**

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO Questions.**

8. (அ) உறுத்துக்கட்டளை கோரி வாதி தன் தந்தைக்கெதிராக தாக்கல் செய்த வழக்கில், நீதிமன்றத்திற்கு வெளியே பிரச்சனை தீர்வு கண்டு விட்டதாக, ஒரு குறிப்பாணையை தாக்கல் செய்து வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டார். வாதி, அவரது தந்தை பிரச்சனையை தீர்க்காமல் வாதியை ஏமாற்றி விட்டார் என்றும், தன் தந்தையின் பொய்யான வாக்குறுதியை நம்பி வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டதாக கூறி, குறிப்பாணையின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை IX விதி 9 உடன் இணைந்த பிரிவு 151 ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்கிறார். அம்மனுவின் நிலைநிற்கும் தன்மை குறித்து விளக்கவும்.

(ஆ) சமாதானத்தின் பேரில் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கெதிராக மேல்முறையீடு செய்வது குறித்து உரிய சட்ட பிரிவுகளுடன் விளக்கவும்.

(a) The Plaintiff withdrew a suit filed by him for injunction against his father as settled out of court by filing a memo. Subsequent to the dismissal of suit based on the said memo, he filed an application under Order IX Rule 9 read with Section 151 of the Code of Civil Procedure to restore the suit with an allegation that his father played fraud on him by not settling the matter and he withdrew the suit believing the false promise of his father. Explain the maintainability of such application.

(b) Explain the maintainability of appeal against consent decree with relevant provisions.

9. (அ) நிறைவேறுதல் நடவடிக்கைகளில், இறந்த தீர்ப்பாணை பெற்றவர் அல்லது தீர்ப்பு கடனாளியின் சட்டபூர்வ பிரதிநிதிகளை சேர்ப்பதற்கான காலவரையறை எவ்வளவு? நிறைவேறுதல் நடவடிக்கைகளில், இறந்த தரப்பினரின் சட்டபூர்வ பிரதிநிதிகளை சேர்க்கும் நடைமுறை குறித்து உரிய சட்டப்பிரிவுகளுடன் விளக்கவும்.

(ஆ) "உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை XXIIவிதி 5 ன் கீழான ஒரு முடிவு, அதே தரப்பினர்களுக்கிடையே அல்லது அவர்கள் மூலம் உரிமை கோரும் நபர்களுக்கு இடையேயான பிந்தய ஒரு வழக்கில் முன் தீர்ப்பு தடையாக அமையும்" — விளக்குக.

(a) What is the period of limitation for bringing the legal representatives of the deceased decree holder or judgement debtor in execution proceedings on record? Explain the procedure for bringing the legal representatives of the deceased parties in execution proceedings on record with relevant provisions.

(b) "A decision under Order XXII Rule 5 of the Code of Civil Procedure would act as res judicata in a subsequent suit between the same parties or persons claiming through them". Explain.

TNPSC-SPECIMEN

10. பிரதிவாதி அவருக்கெதிரான வழக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை II விதி 2 ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை எவ்வாறு நிரூபிக்க வேண்டும் என்பது குறித்து விரிவாக விளக்கவும்.

Elaborate, how the defendant shall prove that the suit against him is barred under Order II, Rule 2 of Code of Civil Procedure?

11. நஷ்ட ஈடுகோரி தாக்கல் செய்யப்படும் வழக்கின் நிலைநிற்கத்தக்க தன்மை குறித்து, தமிழ்நாடு சொத்துக்களை சேதப்படுத்தல் மற்றும் இழப்பை தடைசெய்யும் சட்டம் 1992 ன் அடிப்படையில் விளக்கவும்.

Explain the maintainability of the suit for damages in the light of the Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, 1992.

## பிரிவு ஆ

## SECTION B

### பகுதி அ — (5 × 3 = 15)

### PART A — (5 × 3 = 15)

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any FIVE Questions.**

### குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம்

### CODE OF CRIMINAL PROCEDURE

12. பாதிக்கப்பட்டவருக்காக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர், குற்ற வழக்கு விசாரணையின் போது, அரசு தரப்பு வழக்கறிஞரிடமிருந்து வழக்கை தானே தன் போக்கிற்கு எடுத்துச் செயல்படுகிறார். இக்கூற்றை உரிய சட்டப்பிரிவுகளுடன் விவாதிக்கவும்.

"During a criminal trial, the counsel appointed by the victim takes over the prosecution from the State Prosecutor". Examine the same in the light of the legal provisions.

13. எப்பொழுது ஒரு நபர் கைது செய்யப்பட்டதாக கருதப்படுவார்? "பாதுகாவல்" மற்றும் "கைது" ஒரே பொருளை கொண்டதா? ஒரு உதாரணத்துடன் விளக்கவும்.

When is a person said to be under arrest? Are the terms 'Custody' and 'Arrest' synonymous? Explain with an illustration.



TNPSC - SPECIMEN

14. ஒரு நபர் கைது செய்யப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் தன் முன்பு ஆஜர்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் ஒரு நீதித்துறை நடுவருக்குரிய பங்களிப்பைப் பற்றி உரிய சட்டப்பிரிவுகளுடன் விளக்கவும்.

**Explain the role of a Magistrate in ensuring the production of an accused before him within 24 hours of arrest with relevant provisions.**

15. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதின் முக்கியத்துவத்தைப் பற்றியும், ஒரே வழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட முதல் தகவல் அறிக்கையின் செல்லுபடியாகும் தன்மை குறித்தும் விளக்கவும்.

**Elucidate the importance of registration of FIR and the validity of more than one FIR in one case.**

16. காவல்துறை அறிக்கையின் பேரிலில்லாமல் வேறு விதமாக தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் குற்றச்சாட்டு வனையப்படுவதற்கு முன்பு பதிவு செய்யப்படும் சாட்சியத்தின் தொடர்புடமை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கவும். அத்தகைய கட்டத்தில் புகார்தாரர் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய எதிரிக்கு உரிமை இருப்பின் அது குறித்து விளக்கவும்.

**Explain the importance and relevance of pre-charge evidence in cases instituted otherwise than on police report. Explain the rights of accused to cross examine the prosecution witnesses in such stage.**

TNPSC - SPECIMEN

17. ஒரு குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்ற போதிலும் அமர்வு நீதிமன்றம், அக்குற்றத்தை அசல் அதிகாரம் கொண்ட நீதிமன்றமாக ஏன் கோப்புக்கு எடுக்க முடியாது? இதற்குரிய விதிவிலக்குகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**Why a session court cannot directly take cognizance of an offence even though such an offence is exclusively triable by such court? Explain the exceptions to the same with illustrations.**

18. ஒரு நபருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மகன்கள் இருப்பின் அவர்கள் அனைவருக்கெதிராகவும் ஜீவனாம்சம் கோர அந்த நபருக்கு உள்ள உரிமை குறித்து விளக்கவும். அத்தகைய வழக்கில் மகன்களுக்குரிய பொறுப்பின் தன்மை என்ன? அத்தகைய பொறுப்பு கூட்டானதா அல்லது தனித்தனியானதா அல்லது கூட்டு மற்றும் தனித்தனியானதா?

**When a person is having two or more sons, explain his right to claim maintenance against all of them? What is the nature of liability of the sons in such a case? Is it a joint or several liability or joint and several liability?**

## பகுதி ஆ — (2 × 5 = 10)

## PART B — (2 × 5 = 10)

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Answer any TWO Questions.**

19. சோதனைக்கான நடைமுறையை கடைபிடிக்காமையால் ஏற்படும் சட்டப்பூர்வமான விளைவுகள் குறித்தும், சட்ட விரோத சோதனையின் விளைவு குறித்தும், அது சம்பந்தமான சாட்சியத்தின் ஏற்கத்தகும் தன்மை குறித்தும், வழக்கு விசாரணையின் செல்லுபடியாகும் தன்மை குறித்தும் உரிய சட்டப்பிரிவுகளுடன் விளக்கவும்.

Explain the legal consequences of non compliance of the procedure contemplated while carrying out a search, the effect of illegal search, the admissibility of evidence gathered through an illegal search and the validity of trial with relevant provisions.

20. "மேற்கட்ட புலன் விசாரணை" மற்றும் "மறு புலன் விசாரணை" ஆகியவற்றை வேறுபடுத்துக. ஒரு குற்றத்தை கோப்புக்கு எடுப்பதற்கு முந்தய மற்றும் பிந்தைய நிலைகளில் மேற்கட்ட புலன் விசாரணை செய்ய காவல் அதிகாரி மற்றும் நீதிமன்றத்திற்குரிய அதிகாரத்தைப் பற்றியும், அவ்விதம் கோர புகார்தாரருக்குரிய உரிமை குறித்தும் விளக்கவும்.

Distinguish "further investigation" and "re-investigation". Discuss the powers of police, court and the De-Facto Complainant's right in seeking "further investigation" in pre and post cognizance stage.

21. குற்றத்தை முடித்து வைக்கும் அறிக்கை மற்றும் ஆட்சேபனை மனுவை ஒரு நீதித்துறை நடுவர் பெறும்போது, அவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கவும்.

When the magistrate receives a closure report and a protest petition, Explain the procedure to be adopted by the Magistrate.

22. "நோய் தொற்று பெருவாரியாக பரவக்கூடிய சூழ்நிலையில், கொடுமையான குற்றங்களிலும், உரிய கால வரம்பிற்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாவிட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 167 (2) ன் கீழ் எதிரிக்கு பிணையில் செல்ல உரிமை இருக்கிறது" – விவாதிக்கவும்.

"Non-Submission of charge sheet within prescribed period of limitation even in pandemic situation would entitle an accused to get bail under Section 167(2) of Code of Criminal Procedure even in heinous offences" – Discuss.



TNPSC-SPECIMEN

பிரிவு இ

## SECTION C

பகுதி அ — (5 × 3 = 15)

### PART A — (5 × 3 = 15)

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Answer any FIVE Questions.**

இந்திய சாட்சியச் சட்டம்

### INDIAN EVIDENCE ACT

TNPSC - SPECIMEN

23. ஒரு உயிலில் உள்ள சங்கதிகள் குறித்து தெரியாமல் அதில் சான்றொப்பமிட்ட ஒரு சாட்சியின் சாட்சியத்தின் மதிப்பு என்ன? ஒரு உயிலைச் சுற்றியுள்ள சந்தேகமான சூழ்நிலைகள் குறித்து விளக்கவும்.

What is the evidentiary value of an attesting witness in a will, when he does not know the contents of will. Discuss on the suspicious circumstances shrouding the will?

24. (அ) வாதுரைகளில் கொடுக்கப்பட்ட ஒப்புதல் மற்றும் சாட்சியம் மற்றும் ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்புதல் ஆகியவைகளில் உள்ள வேறுபாடுகள் யாவை?

(ஆ) ஒப்புதலின்பேரில் கொடுக்கப்படும் தீர்ப்புரை குறித்து விளக்கவும்.

(a) What is the distinction between admission in pleadings and admission in evidence and admission in document?

(b) Discuss on judgement on admission.

25. மரபணு சோதனை தொழில் நுட்பம் மூலம் நீதிபரிபாலனம் செய்வதில் நீதிமன்றங்களுக்குரிய பங்கைப் பற்றி விளக்கவும்.

Explain the Role of courts in using DNA technology in Administration of justice.

26. அறுதியான நிருபணம் என்றால் என்ன? அதன் சாட்சிய அந்தஸ்து குறித்து விளக்கவும். அறுதியான நிருபணத்தை மற்ற அனுமானங்களிலிருந்து வேறுபடுத்துக.

What is conclusive proof ? State its evidentiary value. Differentiate it from other kind of presumptions.

27. சிசிடிவி தடயத்தை சாட்சியமாக ஏற்க முடியுமா என்பது குறித்தும், அதன் சாட்சிய அந்தஸ்து குறித்தும் விளக்கவும்.

Explain the admissibility and evidentiary value of CCTV footage.

28. பின்வருவனவற்றிற்கு உரிய சட்டப்பிரிவுகளுடன் சுருக்கமான குறிப்புரை எழுதவும்.

(அ) வாடகைதாரர், ஒப்படைவு பெற்றவர், அனுமதி பெற்றவர் ஆகியோர்களால் செய்யப்படும் முரண்தடை

(ஆ) மின்னணு ஆவணம் பற்றிய அனுமானம்

(இ) உரிமை அல்லது வழக்கம் குறித்த தொடர்புடைய சங்கதிகள்.

Write short notes with relevant provisions on the following :

(a) Estoppel by tenant, Estoppel by bailee and Estoppel by licencee

(b) Presumption as regards Electronic documents.

(c) Relevancy of facts relating to right or customs

29. இந்திய சாட்சிய சட்டத்தில் ஒரு நபரின் அல்லது தரப்பினரின் குண இயல்பின் தொடர்புடைமை குறித்து விவாதிக்கவும், மேலும் உரிமையியல் மற்றும் குற்ற வழக்குகளில் ஒரு நபர் அல்லது தரப்பினரின் குண இயல்பின் தொடர்புடமையில் உள்ள வேறுபாடுகள் குறித்தும் விவாதிக்கவும்.

Discuss the relevancy of character of a person or party under the Indian Evidence Act and difference between the relevancy of character of a person or party in civil and criminal cases.

TNPSC - SPECIMEN

பகுதி ஆ — (2 × 5 = 10)

**PART B — (2 × 5 = 10)**

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO Questions.**

30. 'X' என்பவர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 161(3) ன் கீழ் காவல்துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில், 'A' என்பவர் 'C' என்பவரை குத்திக்கொன்றதை தான் பார்த்ததாக கூறியிருக்கிறார். அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது, 'A' மற்றும் 'B' ஆகியோர் இருவரும் 'C' ஐ குத்தி கொன்றதை தான் பார்த்ததாக கூறுகிறார். விசாரணை நீதிமன்றங்களில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைப்படி முரண்பாட்டை நிரூபிப்பதற்கான முக்கியத்துவத்தை பற்றி விவாதிக்கவும்.

'X' made a statement before the police under section 161(3) of the Code of Criminal Procedure, that he saw 'A' stabbing 'C' to death. In the witness box, he states that he saw 'A' and 'B' stabbing 'C' to death. Discuss the importance of proving contradiction in accordance with the manner followed in the trial courts.

31. பின்வருவனவற்றிற்கு, உரிய சட்டப்பிரிவுகளுடன் சுருக்கமாக குறிப்புரை எழுதுக.

(அ) சிறந்த சாட்சிய விதி.

(ஆ) சங்கதி பற்றிய அனுமானம்

(இ) சட்டம் பற்றிய அனுமானம்

(ஈ) நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் விசயம் (அ) நீதிமுறையில் மெய்யெனக் கொள்ளுதல்

(உ) காப்புடைச் செய்திகள்.

Write short notes with relevant provisions on the following:

(a) Best evidence rule

(b) Presumption of Fact

(c) Presumption of Law

(d) Judicial Notice

(e) Privileged communications

TNPSC - SPECIMEN

32. காணொலி மூலம் பதிவு செய்யப்படும் சாட்சியத்தின் செல்லும் தன்மை குறித்து விளக்கவும். அவ்விதம் சாட்சியத்தை பதிவு செய்யும் போது நீதிமன்றம் எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

Explain the validity of the evidence recorded through video conference in a Criminal Trial and what are the precautions to be taken by the court while recording such evidence.

33. புலன் விசாரணை அதிகாரி குற்ற இறுதி அறிக்கையுடன் பல ஆவணங்களை சமர்ப்பித்திருக்கிறார் – வழக்கு விசாரணையின் போது அரசு தரப்பில் அந்த ஆவணங்களை குறியீடு செய்ய தவறிவிட்டது. அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து சட்டக் கோட்பாடுகளின் உதவியுடன் விளக்கவும்.

Investigating Officer submitted several documents along with the final report. But during trial, the prosecution failed to mark the documents. Explain the consequences with the help of legal propositions.

## பிரிவு ஈ

## SECTION D

### பகுதி அ — (5 × 3 = 15)

### PART A — (5 × 3 = 15)

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Answer any FIVE Questions.**

## இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

## CONSTITUTION OF INDIA

34. பின்வருவனவற்றிற்கு சுருக்கமாக குறிப்புரை எழுதுக.

(அ) மதிப்புறுத்து நீதிமன்றம்.

(ஆ) தொகுப்பு நிதியில் விதிக்கப்பட்ட செலவுகள்.

(இ) "பெர் இன்குரியம்".

Write short notes on the following :

(a) "Court of Record"

(b) Expenses charged on consolidated Funds

(c) "PER INCURIUM"

TNPSC - SPECIMEN

35. பின்வருவனவற்றிற்கு சுருக்கமாக குறிப்புரை எழுதுக.

(அ) சம வேலைக்கான சம ஊதியம்

(ஆ) கைவிடு கோட்பாடு

(இ) முறையது போலமை இயற்றுச் சட்ட கோட்பாடு.

Write short notes on the following :

(a) Equal pay for equal work

(b) Doctrine of waiver

(c) Doctrine of colorable legislation

36. பின்வருவனவற்றிற்கு சுருக்கமாக குறிப்பு எழுதுக.

(அ) அரசியலமைப்பு நிர்ணய சபை

(ஆ) மக்கள் நலமுறு நாடு

(இ) மத்திய அரசின் தலைமை ஆலோசகராக இந்திய தலைமை வழக்கறிஞர்

Write short notes on the following :

(a) Constituent assembly

(b) Welfare State

(c) Attorney General as Chief Adviser of Government of India.

37. இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் குற்றவியல் விசாரனை முறை சட்டத்தில் உள்ள பிரிவுகளின் உதவியுடன், கீழமை நீதிமன்றங்களை கண்காணிக்க உயர்நீதிமன்றத்திற்குரிய கடமை மற்றும் அதிகாரங்களைப் பற்றி விவரிக்கவும்.

Describe the superintendence powers and duty of High Court to exercise such powers over Subordinate Courts with relevant provisions contained in Constitution and Code of Criminal Procedure.

38. அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றியிருக்கிறோம். எந்த நாட்டிலிருந்து அந்த கொள்கைகளை நாம் பெற்றிருக்கிறோம்.

How far we have implemented the Directive Principles of State Policy. From which country, we have derived the directive principles of state policy.

TNPSC - SPECIMEN

39. சட்டத்தின் ஆட்சியைப் பற்றி சுருக்கமாக எழுதவும்.

Write a brief note on the Rule of Law.

40. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் அதிகார பிரிவினை கோட்பாட்டை நிறைவேற்றுவதில் ஏற்படும் நன்மைகள் மற்றும் தடைகள் யாவை?

What are the advantages and impediments in the implementation of doctrine of Separation of Powers under the Indian Constitution?

## பகுதி ஆ — (2 × 5 = 10)

## PART B — (2 × 5 = 10)

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Answer any TWO questions.**

41. "மற்றவர்களுக்கு பொருந்தாமல் ஆனால் ஒரு நபருக்கு மட்டுமே பொருந்தக்கூடிய, சில காரணங்களுக்காக அல்லது சில சிறப்பான சூழ்நிலைகளின் காரணமாக ஒரு சட்டம் ஒரு தனிப்பட்ட நபருக்காக மட்டும் ஏற்பட்டாலும் அந்த தனிப்பட்ட நபர் ஒரு வர்க்கமாக கருதப்பட வேண்டும்". மேற்கூறிய கூற்றை உரிய தீர்முடிவுகளுடன் விளக்கவும்.

"A law may be constitutional even though it relates to a single individual if on account of some special circumstances or reasons applicable to him and not applicable to others, that single individual may be treated as a class by itself". Elucidate with the help of relevant case laws.

42. உணவு கலப்படம் என்பது இந்திய சமுதாயத்திற்கு ஒரு பெரும் சவால் ஆகும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட சரத்துக்களை மேற்கோள்காட்டி விவாதிக்கவும்.

Food adulteration is a great challenge for Indian Society. Refer the relevant provisions in the Constitution and discuss the same.

43. நீதியரசர் புட்டாசுவாமி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு வகையான தனித்திருக்கும் உரிமைகள் யாவை? அவற்றை சுருக்கமாக விளக்கவும்.

What are the various types of privacies as contemplated in Justice Puttaswamy case? Explain the same briefly.

44. தூய்மையான சுற்றுப்புறச் சூழ்நிலைக்கான உரிமை தான் தீபாவளியின் போது பட்டாசு வெடித்தலுக்கு, சட்ட ரீதியான ஒழுங்குமுறை ஏற்படுவதற்கு வழி வகுத்ததா? இது சம்பந்தமாக இந்திய அரசமைப்பு சட்டத்தின் உரிய ஷரத்து மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு(கள்) அடிப்படையில் விவாதிக்கவும்.

Did the right to clean environment entail a legal regulation on bursting crackers/fire works during Diwali? Discuss in the light of relevant articles in Indian Constitution and Judgement(s) of the Apex Court in this regard.

TNPSC-SPECIMEN

TNPSC-SPECIMEN

SEAL

TNPSC-SPECIMEN